**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**

**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**ஆணை நாள்: 03.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண்.SA12991/F/2019**

**திரு பா. ராதாகிருஷ்ணன், ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**கோட்டப்பொறியாளர்,**
**நெடுஞ்சாலைத்துறை,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,**
**சிவகங்கை மாவட்டம் - 630562. ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **18.09.2019** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **18.10.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **23.12.2019** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (03.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு பா. ராதாகிருஷ்ணன், சிவகங்கை மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சிவகங்கை மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 18.09.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், சிவகங்கை மாவட்டம், நெடுஞ்சாலைத்துறை, கோட்டப்பொறியாளர் அலுவலக கட்டுப்பாட்டில் பணிபுரியும் உயர்திரு கோட்டப்பொறியாளர் முதல் கடைநிலை ஊழியர்கள் வரையிலானவர்களின் பணிப்பதிவேடு, சம்பளம், சொத்து விபரங்கள் உள்ளிட்ட இதர விபரங்களை ஒவ்வொரு அலுவலர்களுக்கும் தனித்தனியே நகல்கள் மற்றும் அவ்வலுவலகத்தில் பிரிவு வாரியாக பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களின் பெயர் பட்டியல், மேலும் அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள் 1973 என்பதன் விதி 7-ன் கீழ் 31.08.2019 வரை அரசிடம் தாக்கல் செய்த சொத்துக்கள், கடன்கள், பொறுப்புகள் பற்றிய விபர அறிக்கையினை ஒவ்வொருவருக்கும் நகல்கள் மற்றும் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம் முழுவதும் நெடுஞ்சாலைத்துறையின் கீழ் எத்தனை சாலைப்பணியாளர் பணியாற்றுகிறார்கள் அவர்களின் பெயர் பட்டியல் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார். மேலும் இளையான்குடி வட்டம் முழுவதும் நெடுஞ்சாலைத்துறையின் கீழ் செயல்படும் சாலைப்பணியாளர்களின் பணியை கண்காணிக்கும் அதிகாரம் உள்ள அலுவலரின் பதவி மற்றும் அலுவலக முகவரியையும், ஒரு புகார் மனு மீது எத்தனை தினங்களுக்கு தீர்வு காணப்படும் என்ற விபரமும், அவ்வாறு தீர்வு காணாத அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க எங்கு புகார் அளிக்க வேண்டும் அவ்வதிகாரியின் பெயர், பதவி மற்றும் அலுவலக முகவரி என்பது போன்ற தகவல்களை வழங்கக் கேட்டு 9 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 18.10.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் 18.10.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சிவகங்கை மாவட்டம் 630562 அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 25.10.2019 நாளிட்ட கடிதம் மூலமாக ஏற்கனவே தகவல் வழங்கப்பட்டது என தெரிவித்துள்ளார் அத்தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 23.12.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (03.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, தான் கோரிய தகவலை தனக்கு பொதுத் தகவல் அலுவலர் முழுமையாக வழங்கியதாகவும் எனவே இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீது எந்த மேல்நடவடிக்கையும் தேவையில்லை எனத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரும் மேல்முறையீட்டாளருக்கு ஏற்கனவே தகவல் வழங்கியதாக தெரிவித்தார். ஆணையம் இதை பதிவு செய்து, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA12991/F/2019

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
கோட்டப்பொறியாளர்,
நெடுஞ்சாலைத்துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
சிவகங்கை மாவட்டம் - 630562.

மனுதாரர்
திரு பா. ராதாகிருஷ்ணன்,
த/பெ திரு.க. பாண்டி,
999, மேலத்தெரு,
வடக்கு சாலைக்கிராமம்,
சாலைக்கிராமம் அஞ்சல்,
இளையான்குடி வட்டம்,
சிவகங்கை மாவட்டம் - 630710.

Copy to: Judgement File/ Spare.
JE/ PA – 11.11.2020